







# Orientation to Ontario

1-855-626-0002
https://orientationontario.ca



## கனடாவில் கஞ்சா தொடர்பான சட்டங்களும் ஒழுங்குவிதிகளும்

கனடாவில் கஞ்சா பாவிப்பது சட்டபூர்வமானது. புத்தூக்கக் கஞ்சாவை வாங்கும் போதும் நுகரும் போதும் மக்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு ஒன்ராறியோ அரசாங்கம் விதிகளை அமைத்திருக்கின்றது.

கஞ்சாவைக் கொள்வனவு செய்வதற்கும், பயன்படுத்துவதற்கும், அதை வைத்திருப்பதற்கும் வளர்ப்பதற்கும் நீங்கள் 19 வயதுடையவராகவும் அதற்கு மேற்பட்ட வயதுடையவராகவும் இருக்க வேண்டும், மேலும் Ontario Cannabis Store (OCS) (ஒன்ராறியோ கஞ்சா அங்காடி (OCS)) மூலம் அல்லது Gaming Commission of Ontario (AGCO) (ஒன்ராறியோவின் சூதாட்ட ஆணைக்குழு (AGCO)) இன் அனுமதிப்பத்திரம் பெற்ற கடை மூலம் இணையவழியாக வாங்கிய எந்த நேரத்திலும் அதிகபட்சமாக 30 கிராம் உலர்ந்த கஞ்சாவை (அல்லது அதற்குச் சமனானது) பொதுவில் வைத்திருக்கலாம்.புகையிலையைப் புகைப்பது அனுமதிக்கப்பட்ட எந்த இடங்களிலும் நீங்கள் கஞ்சாவைப் புகைத்து உள்ளிழுக்கலாம். கனடாவின் தேசிய எல்லைகளுக்கு வெளியே கஞ்சாவைக் கொண்டு செல்வது சட்டவிரோதமானது. உங்களுடைய மாநகராட்சி மன்றங்கள் உள்நாட்டில் கஞ்சா பயன்படுத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கான துணைச் சட்டங்களைக் கொண்டிருக்கலாம்.



மேலும் தெரிந்துகொள்வதற்கு canada.ca ஐப் பார்வையிடுக

### கஞ்சா செடியும் தயாரிப்புகளும்

கஞ்சா என்பது கஞ்சா சாடிவா என்ற செடியைக் குறிக்கிறது, அத்துடன் இது ஹாஷ் முதல் சணல் எண்ணெய்கள் வரை பல வடிவங்களில் காணப்படுகின்றது.



கஞ்சா செடி ஒரு தண்டு, இலைகள், மொட்டுகள் என்பவற்றை உள்ளடக்கியது. கஞ்சாவுக்கு மரிஜுவானா, வீட், டோப், பொட் உள்ளிட்ட பல பெயர்கள் உள்ளன, அவை பெரும்பாலும் மொட்டுக்களையும் மொட்டுகளிலிருந்து உருவாக்கப்பட்ட தயாரிப்புகளையும் குறிக்கின்றன.

சாடிவா, இண்டிகா, ரூடராலிஸ், ஹைபிரிட்ஸ உள்ளிட்ட பல்வேறு கஞ்சா செடி வகைகள் காணப்படுகின்றன, அவை வெவ்வேறு உடற்றொழியியல் விளைவுகளைக் கொண்டவையாகச் சந்தைப்படுத்தப்படுகின்றன. கஞ்சாவில் கன்னாபினாய்டுகள் எனப்படும் 100 க்கும் மேற்பட்ட இரசாயனக் கலவைகள் உள்ளன, அவை மனித எண்டோகன்னாபினாய்டு அமைப்புடன் இடைவினையாற்றிப் பரந்தஅளவிலான உடற்றொழியியல் விளைவுகளை உருவாக்குகின்றன. மிகவும் பொதுவாக அறியப்பட்ட இரண்டு செயலூக்கமுடைய சேர்மானக்கூறுகளாவன:

- CBD (கன்னாபிடியோல்): போதையூட்டும் விளைவுகள் அற்ற நோநீக்கி, அழற்சி எதிர்ப்பு, பதகளிப்பு-எதிர்ப்பு பண்புகளுக்காக மிகவும் பெயர் பெற்றது.
- THC (டெல்டா-9 டெட்ராஹைட்ரோகன்னாபினோல் அல்லது d-9-THC): போதையூட்டக்கூடிய விளைவுகளுக்கும் (உங்களை “ஆசுவாசமடையச்” செய்யத்தக்கது) சில சிகிச்சைமுறைப் பயன்பாடுகளுக்கும் பெயர் பெற்றது.

கஞ்சா நுகர்வின் நான்கு அடிப்படை முறைகள் காணப்படுகின்றன:

- **உள்ளிழுத்தல்:** இது மனிதர்கள் கஞ்சாவை நுகரும் மிகவும்

Funded by/Financé par :
Immigration, Refugees and Citizenship Canada | Immigration, Réfugiés et Citoyenneté Canada
Ontario

பொதவான வழியாகும். ஒர கை குழாயை, பொங்கை (bong), ஆவியாக்கியை, ஜொயின்டை அல்லத ஹுக்காவைப் பயன்படுத்தி புகைப்பத இதில் அடங்கும்.

- **வாய்வழியான சீதப்படலமாக:** தயாரிப்பு (மிகவும் பொதவாக ஒர கசாயம்) நாக்கின் கீழ் தடவப்படுகிறத அல்லத வாயில் தளிக்கப்பட்டு உறிஞ்சப்படுகிறத.
- **உட்கொள்தல்:** ஒர உணவு அல்லத பானப் பொரளின் வடிவில் கஞ்சாவை உட்கொள்தல். இந்த உண்ணத்தக்க தயாரிப்புகளில் செயெலுக்கமுடைய கன்னாபினாய்டுகள் அடங்கியிரக்கின்றன.

மற்றேபூச்சாக: கஞ்சா தயாரிப்புகள் செயெலுக்கமுடைய கன்னாபினாய்டுகளுடன் தூய ஒர தடித்த எண்ணெய் சாறைப் பயன்படுத்தி தோலில் தடவப்பட்டு அதன் வழியாக உறிஞ்சப்படுகின்றன.

மேலும் அறிந்த கொள்வதற்கு, Canadian Public Health Association (கனேடிய பொதுச் சுகாதார சங்கம்) இன் கஞ்சா அடிப்படை விபரத்தாளை cpha.ca/cannabasics இல் வாசியுங்கள்.

## வாகனமோட்டுதலும் கஞ்சாவும்

கஞ்சாவைப் பயன்படுத்திய பின்னர் ஒரபோதும் வாகனம் ஓட்டாதீர். நீங்கள் கஞ்சாவால் பலவீனமாக்கப்பட்ட நிலையில் வாகனம் ஓட்டுவத சட்டவிரோதமானதுடன் அத ஆபத்தானத. இதில் கார்கள், பெரிய லொறிகள், படகுகள், பனிச்சறுக்கல் வண்டிகள், வீதிக்கு வெளியே பயணிக்கக்கூடிய வாகனங்கள் ஆகியவை அடங்கும்.

ஒன்ராறியோவில் பூச்சிய சகிப்புத்தன்மைச் சட்டம் உள்ளத. அற்ககோலைப் போலவே, நீங்கள் வாகனம் ஓட்டிக் கொண்டிரந்தால், உங்களுடைய உடம்பில் கஞ்சாவைக் கொண்டிரக்க உங்களுக்கு அனுமதி இல்லை (தூட்டாட்சி அங்கீகாரம் பெற்ற போதைப்பொரள் அடையாளம் காணும் பரிசோதனைச் சாதனத்தால் கண்டறியப்பட்டவாற).

பொலிசாரிடம் வீதியோரப் போதைப்பொரள் அடையாளம் காணும் பரிசோதனைக் கரவிகளும் தளிந்த அறிவுடை நிலைப் பரிசோதனைகளும் உள்ளடங்கலாக, பலவீனமான சாரதிகளைக் கண்டறிவதற்கான கரவிகளும் பரிசோதனைகளும் உள்ளன. நீங்கள் கஞ்சாவால் (அல்லத வேற ஏதேனும் போதைப்பொரளால் அல்லத அற்ககோலால்) பலவீனமடைந்திரப்பதை ஒர பொலிஸ் அதிகாரி கண்டறிந்தால், பின்வரபவை உட்பட, கடுமையான தண்டனைகளை நீங்கள் எதிர்கொள்வீர்:

- அனுமதிப்பத்திர இடைநிறுத்தம்
- நிதிசார் அபராதங்கள்
- வாகனப் பறிமுதல்கள்
- குற்றவியல் பதிவுகள்
- சிறைவாசம்
- கனடாவில் உங்களுடைய அந்தஸ்தை இழத்தல்

திரம்பத் திரம்பக் குற்றமிழைப்போர் நீண்டகால இடைநிறுத்தங்களையும் கட்டாயக் கல்வி, சிகிச்சைத் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற மேலதிக பின்விளைவுகளையும் எதிர்கொள்வர். மேலும் அறிந்த கொள்வதற்கு, ontario.ca/page/cannabis-and-driving ஐப் பார்வையிடுக

உங்களுக்குத் தெரியுமா?

சட்டத்திற்குப் புறம்பாகச் செயற்படும் நபர்கள் தூட்டாட்சி Cannabis Act (கஞ்சா பற்றிய சட்டம்) இன் கீழ் குற்றவியல் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள முடியும். இதன் விளைவாக, நிரந்தர குடியிரப்பாளர்கள் தமத அந்தஸ்தை இழக்க நேரிடலாம், மேலும் தற்காலிக குடியிரப்பாளர்களுக்குக் கனடாவில் நுழையவோ தங்கவோ முடியாமல் போகலாம். தண்டனைகள் பற்றி canada.ca இல் மேலும் அறிந்த கொள்க



Cannabis Act (கஞ்சா பற்றிய சட்டம்)

ஒக்டோபர் 17, 2018 அன்ற கனடாவில் பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக கஞ்சாவைப் பயன்படுத்தவத சட்டபூர்வமாக்கப்பட்டத. கனடா முழுவதும் கஞ்சாவை உற்பத்தி செய்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல், வைத்திரத்தல் என்பவற்றைக் கட்டுப்படுத்த Cannabis Act (கஞ்சா பற்றிய சட்டம்) கடுமையான சட்டக் கட்டமைப்பை உரவாக்குகிறத. மேலும் தெரிந்த கொள்வதற்கு laws-lois.justice.gc.ca ஐப் பார்வையிடுக





